## 12.2 1998–99–ம் ஆண்டின் ஊராட்சி ஒன்றியத்திற்கான பத்தாவது நிதிக் குழு மான்ய ஒதுக்கீட்டில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் உதவி செயற்பொறியாளர்களுக்கு ரூ.9.035 கோடி செலவில் 241 ஈப்புகள் வாங்குதல்

---

ஊரக வளர்ச்சி (தி4) துறை

அரசாணை (நிலை) எண்.185 நாள் : 1.9.1998

படிக்க :

ஊரக வளர்ச்சி இயக்குநரின் நேர்முக கடித எண். 26921/98/எப்2, நாள் 27.3.1998 மற்றும் 1.7.1998.

**ஆணை**

ஊரக வளர்ச்சி இயக்குநர் பார்வையில் கண்ட கடிதத்தில், அரசின் கொள்கை முடிவுப்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 2 ஈப்புகள் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் 173 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இரண்டாவது ஈப்புகள் வாங்கி வழங்கப்பட வேண்டுமென்றும், ஊரக வளர்ச்சித் துறையிலுள்ள 68 ஊரக வளர்ச்சி துணைக் கோட்டங்களில் 68 உதவி செயற்பொறியாளர்களுக்கு 68 ஈப்புகளும் வாங்கி வழங்கப்பட வேண்டுமென்றும் கோரியுள்ளார். மேற்கூறப்பட்ட 241 ஈப்புகளை வாங்குவதற்காகும் செலவினத் தொகையான ரூ.9.035 கோடியினை (ஒரு ஈப்புக்கு ரூ.3.75 இலட்சம் வீதம்) 1998–1999 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் பத்தாவது நிதிக்குழு மான்யத்திலிருந்து ஈடு செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் 173 ஈப்புகளுக்கான ஓட்டுநர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு அதற்கான சம்பளம் எரிபொருள் மற்றும் இதர பராமரிப்புச் செலவினங்கள் ஆகியவைகளை அந்தந்த ஊராட்சி ஒன்றித்தின் பொது நிதியிலிருந்தே மேற்கொள்ளலாம் என்றும், இதே போல் ஊரக வளர்ச்சி முகமையிலுள்ள 68 உதவி செயற்பொறியாளர்களுக்கு வழங்கப்படவிருக்கும் 68 ஈப்புகளுக்கான ஓட்டுநர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதற்கான சம்பளம், எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் அனைத்தையும் அந்தந்த ஊரக வளர்ச்சி முகமையின் திட்டங்களில் நிர்வாக செலவினத்திலிருந்து (administrative cost) மேற்கொள்ளலாம் என ஊரக வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேலும் 27.4.98 அன்று நடைபெற்ற ஊரக வளர்ச்சித் துறையின் மான்ய கோரிக்கையின் போது அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 2 ஈப்புகள் என்ற அடிப்படையின்படி ஏற்கனவே இவ்வரசு வழங்கிய 211 ஈப்புகள் போக 173 ஈப்புகளுடன் உதவி செயற்பொறியாளர்களுக்கு 68 ஈப்புகளும் ஆக மொத்தம் 241 ஈப்புகள் ரூ.9.035 கோடி செலவில் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

4. அரசு கவனமான பரிசீலனைக்குப் பின் ஒரு ஈப்பிற்கு ரூ.3.75 இலட்சம் வீதம் 241 ஈப்புகள் வாங்குவதற்கும், இதற்காகும் திருத்திய செலவினத் தொகையான ரூ.903.75 இலட்சங்கள் (ரூ.3.75×241) (ரூபாய் தொள்ளாயிரத்து மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) பத்தாவது நிதிக்குழு நிதியிலிருந்து செலவிடவும் அங்கீகாரமும், அனுமதியும் அளிக்கிறது. அரசு உயர் மட்டக்குழுவும் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

5. ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் 173 ஈர்ப்புகளுக்கான ஈப்பு ஓட்டுநர் பதவிகள் தோற்றுவிக்கப்பட்டு அதற்கான சம்பளம், எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் அனைத்தையும் அந்ததந்த ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தே மேற்கொள்ளவும் இதேபோல் 68 உதவி செயற்பொறியாளர்களுக்கு வழங்கப்படும் 68 ஈப்புகளுக்கான ஓட்டுநர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதற்கான சம்பளம் மற்றும் பராாமரிப்புச் செலவினங்கள் அனைத்தையும் அந்தந்த ஊரக வளர்ச்சி முகமையின் திட்டங்களின் நிர்வாக செலவினத்திலிருந்து (administrative cost) மேற்கொள்ளவும் ஆணையிடுகிறது. முந்தைய ஆண்டைப் போல ஈப்பு ஓட்டுநர் பதவிகள் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தகுதிபெற்ற அலுவலக உதவியாளர் / டிராக்டர் ஓட்டுநர் / ரோலர் ஓட்டுநர், சுத்தப்படுத்துவோர் (Cleaner) ஆகியோருக்கு முன்னுரிமை அளித்து நியமனக்குழு மூலமாக தேர்ந்தெடுத்து நியனம் செய்ய ஆணையிடப்படுகிறது.

6. மேற்படி 241 ஈப்புகள் வாங்குவதற்கான தொகை ரூ. 903.75 லட்சத்தை பத்தாவது நிதிக்குழு மான்யத்திலிருந்து (Tenth Finance Commission) ஒதுக்கீடு செய்யப்படும். இதற்கான அரசாணை தனியாக பிறப்பிக்கப்படும்.

7.மேற்படி 241 ஈப்புகளை விதிமுறைகளுக்குட்பட்டு இந்திய அரசின் கொள்முதல் மற்றும் விற்பனை இயக்குநரின் (Director General of Supplies and Disposals of Government of India) தற்போதைய விலைப்பட்டியலுக்கு மிகாமல் மேற்படி வாகனங்களை வாங்க வேண்டும் என்று ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது.

8.பத்தாவது நிதிக்குழுவின் மானியத்திலிருந்து எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு எவ்வளவு தொகை வழங்கப்படும் என்பது குறித்த விபரங்கள் மீது அரசு ஆணைகளும் தனியாக பிறப்பிக்கப்படும்.

## 12. CENTRAL FINANCE COMMISSIONS

**9.**இந்த ஆணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 62793/நிதி (ஊரக வளர்ச்சி /98–1, நாள்,19.08.1998ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்